முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 451/2022**

திரு. செல்வி (P.W. –1) 20.12.2023.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

என் சகோதரர் ஈஸ்வரன் மூர்த்தி எந்த வேலைக்கும் செல்லவில்லை. என் சகோதரர் எங்கள் வீட்டின் உள்ள நபர்களின் சம்மதத்துடன் தான் திருமணம் நடைப்பெற்றது. ஈஸ்வரன் மூர்த்தி பொறுப்பாக இருந்ததால் தான் அவருக்கு எனது தகப்பனார் திருமணம் செய்துவைத்தார் என்றால் சரியல்ல. ஈஸ்வரன் மூர்த்தி 2 குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். ஈஸ்வரன் மூர்த்தி உயிருடன் இருந்த வரை தாவா சொத்தில் தான் குடியிருந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் மாட்டு வண்டி வைத்து தொழில் செய்து வந்தார். ஈஸ்வரன் மூர்த்தி இடம் வாங்கி விற்கும் புரோக்கர் தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அந்த வகையில் ஈஸ்வரன் மூர்த்தி க்கு வருமானம் வந்தது என்றும் அதனால் என் தகப்பனாரும் நல்ல உறவுடன் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. ஈஸ்வரன் மூர்த்தி யின் வருமானத்தை வைத்து தான் எனது தகப்பனார் எனக்கும் சகோதரியான 2 ஆம் வாதிக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. ஈஸ்வரன் மூர்த்தி யின் வருமானத்தை வைத்து தான் தாவா சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடன் உடன்பிறந்த மற்றோரு சகோதரர் மகேஸ் உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றும் அவர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றும் சொன்னால் சரிதான். என் தாயார் தற்போது 74 வயது. வயதான எனது தாயாரை கட்டாயப்படுத்தி என்னுடைய சகோதரர் மகேஸ் மற்றும் என்னுடைய தாயாரின் பங்கை விடுதலைப் பத்திரம் எழுதி விடுதலை பத்திரம் மூலம் எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை பத்திரத்திற்காக என் தாயாருக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை.

2. அந்த விடுதலை பத்திரம் (வா.சா.ஆ–2 ) பெயரளவுக்கு மட்டுமே எழுதப்பட்டது என்றால் சரியல்ல. ஈஸ்வரன் மூர்த்தி இறந்துவிட்டதாலும் அவருடைய குழந்தைகள் மையனாராக இருப்பதாலும் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எங்கள் குடும்பத்தை சேர்ந்த நபர்கள் ஒன்றுசேர்ந்து தாவா சொத்தை ஈஸ்வரன் மூர்த்தியின் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் விட்டுக்கொடுப்பதாக வாய்மொழியாக உறுதிமொழி கொடுத்தோம் என்றால் சரியல்ல. ஆகையால் 1ஆம் பிரதிவாதி எங்களுக்கு தலா 2 லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மார்க்கெட் விலை உயர்ந்துவிட்டதால் மேற்படி உறுதிமொழியை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிகளும் என்னுடைய தாயாரும் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் என்னுடைய தாயாரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 1.1.2020–ம் தேதி வாய் மொழி பாக பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் எனக்கு தாவா சொத்தில் பாக பிரிவினை கோர உரிமையில்லை என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தின் 1 செண்ட்டின் விலை ரூ. 10 லட்சம் ஆகும். தற்போது சாட்சி மொத்த சொத்தின் 10 லட்சம் என்று சாட்சியம் அளிக்கிறார். ஆகையால் நான் சரியான நீதிமன்ற கட்டணம் செலுதவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

| |
|---|
| சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.<br>ஓம்/– பா.செல்லதுரை.,<br>முதன்மை சார்பு நீதிபதி,<br>திருப்பூர். |